## விண்மீன் நடப்பு நிகழ்வுகள்

1) எம். ஆர். எப் சேலன்ஜ் பட்டத்தை வென்ற முதல் பெண் டிரைவர் ஜேமி சட்விக், எந்த நாட்டை சேர்ந்தவர்?

A] அமெரிக்கா

B] இங்கிலாந்து

C] பிரான்ஸ்

D] பெல்ஜியம்

- ✓ பிப் 2019 சென்னையில் இங்கிலாந்தை சேர்ந்த ஜேமீன் சட்விக் உலகிலேயே **MRF** சேலன்ஞ் கோப்பையை வென்ற முதல் பெண்மணி என்ற சாதனையை படைத்தார். இவர் இறுதி சுற்றில் மூன்று வெற்றிகளை பெற்று இருந்தார்.
- ✓ 2015ம் ஆண்டில் பிரிட்டிஷ் **GT** சாம்பியன்ஷிப் வென்ற முதல் பெண் மற்றும் அந்த கோப்பையை வெள்ளும் இளம் வீரர் என்ற பெருமைகளும் இவரையே சாரும்.

2) கனடிய சினிமா மற்றும் தொலைக்காட்சி அகாடமியின் வாழ்நாள் சாதனையாளர் விருது (**LTA**) பெற்ற இந்திய திரைப்பட இயக்குனர் யார்?

A] மீரா நாயர்

B] ஷ்யாம் பெனிகல்

C] தீபா மேஹ்தா

D] மணிரத்னம்

- ✓ கனடிய சினிமா மற்றும் தொலைக்காட்சி அகாடமியின் (**ACCT**) வாழ்நாள் சாதனையாளர் விருது புகழ்பெற்ற இந்திய-கனடிய திரைப்பட இயக்குநரான தீபா மேத்தாவிற்கு வழங்கப்பட உள்ளது. இவர் **Elements Trilogy — Fire (1996), 1947 Earth (1999) and Water (2005)** போன்ற புகழ்பெற்ற படங்களை இயக்கியுள்ளார்.
- ✓ மெஹ்தாவின் "**Earth**" சிறந்த அண்டைமொழி திரைப்படத்திற்கான அகாடமி விருதுக்கு அதிகாரப்பூர்வ நுழைவு திரைப்படமாக இந்தியாவால் சமர்ப்பிக்கப்பட்டது. "**Water**" திரைப்படம்

சிறந்த அண்டைமொழி திரைப்படத்திற்கான அகாடமி விருதுக்கு அதிகாரப்பூர்வ நுழைவு திரைப்படமாக கனடாவால் சமர்ப்பிக்கப்பட்டது..

- ✓ "**Earth**" ஆஸ்கார் விருதுக்கு பரிந்துரைக்கப்பட்ட முதல் திரைப்படம் ஆகும்.
- ✓ கனடிய திரைப்படங்கள், ஆங்கில மொழி தொடர்கள் மற்றும் டிஜிட்டல் மீடியா தயாரிப்புகளில் திறமையானவர்களை கண்டறிந்து சிறப்பிக்க **ACCT** நிறுவனம் கனடிய திரை விருதுகள் விழாவை நடத்துகிறது.
- ✓ மே 2012ல், மேத்தா நிகழ்ச்சி கலைகளில் கனடாவின் மிக உயர்ந்த கௌரவமான கவர்னர் ஜெனரலின் நடிப்பு கலைகளில் வாழ்நாள் கலைத்துவ சாதனைக்கான விருது பெற்றார்.

3) உலக அரசாங்க உச்சி மாநாடு (**WGS-2019)** எந்த நகரத்தில் நடைபெற்றது?

**A]** நியூ டெல்லி

**B]** துபாய்

**C]** பாரிஸ்

**D]** லண்டன்

- ✓ உலகநாடுகள் அனைத்திலும் மிகவும் வெற்றிகரமான எதிர்காலத்தை உருவாக்க பிப்.10 அன்று 7வது உலக அரசாங்க உச்சி மாநாடு துபாயின் மடினட் ஜிமேரியாவில் நடைபெற்றது.
- ✓ 3 நாள் மாநாடு துணை ஜனாதிபதி மற்றும் துபாயின் ஆட்சியாளரான ஷேக் மொஹமட் பின் ரஷீத் ஆதரவில் நடைபெற்றது. தொழில்நுட்ப எதிர்காலம், வாழ்க்கை மற்றும் வாழ்க்கை தரத்தின் எதிர்காலம், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம், கல்வி மற்றும் தொழிலாளர் சந்தை,வர்த்தகம் மற்றும் சர்வதேச ஒத்துழைப்பு, சமூகங்கள்,அரசியலமைப்புகள், அரசாங்கங்கள் மற்றும் சமூகங்களுக்கிடையிலான தகவல் தொடர்பு ஆகிய 7 தலைப்புகளில் இம்மாநாடு நடைபெறுகிறது.
- ✓ ஆட்சி தலைவர்கள்,மந்திரிகள் மற்றும் தொழில் தலைவர்கள் என 140 நாடுகளிலிருந்து சுமார் 4000 பேர் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர்.
- ✓ அரசு, எதிர்காலவாதம், தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்பு ஆகியவற்றின் குறுக்கீட்டில் ஒரு அறிவு பரிமாற்ற தளமாக இந்த உச்சி மாநாடு இருந்தது. இது கொள்கை வகுப்பாளர்கள், வல்லுநர்கள் மற்றும் மனிதவள முன்னேற்றத்தில் முன்னோடிகளுக்கு ஒரு சிறந்த தலைமை சிந்தனைகளுக்கான தளமாக செயல்படுகிறது.
- ✓ எதிர்கால சவால்களை சமாளிக்க படைப்பாற்றலை ஊக்குவிப்பக்கும் வகையில் புதுமைகள், சிறந்த நடைமுறைகள் மற்றும் அறிவார்ந்த தீர்வுகளை இந்த மாநாடு காட்சிப்படுத்துகிறது.

**4) 2019 International Day of Women and Girls in Science -** ன் மையக்கருத்து என்ன?

**A] Transforming the World: Parity for All**

**B] Investment in Women and Girls in Science for Inclusive Green Growth**

**C] Gender Equality and Parity in Science for Peace and Development**

**D] Women's participation in policy-making processes**

- ✓ ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி மாதம் 11 ஆம் தேதி, அறிவியலில் மகளிர் மற்றும் பெண் குழந்தைகளின் பங்களிப்பை ஊக்கப்படுத்த **International Day of Women and Girls in Science** கொண்டாடப்படுகிறது.
- ✓ அறிவியல் மற்றும் தொழில்நுட்ப சமுதாயங்களில் பெண்களும், பெண் குழந்தைகளும் முக்கிய பங்கைக் கொண்டிருப்பதோடு, அவர்களது பங்களிப்பு பலமாக இருக்க வேண்டும் என்பதற்காகவே இந்த நாள் கொண்டாடப்படுகிறது. 2019ஆம் ஆண்டில் இந்த தினத்தின் மையக்கருத்து "**Investment in Women and Girls in Science for Inclusive Green Growth"** ஆகும்.

**5) 'AMAN 19',** பன்னாட்டு கடல் பயிற்சி எந்த நாட்டில் நடத்தப்பட்டது?

**A]** பாகிஸ்தான்

**B]** இந்தியா

**C]** இலங்கை

**D]** மியான்மர்

- ✓ பிப்.8 அன்று '**AMAN 19**' என்ற பன்னாட்டு கடல் பயிற்சி பாகிஸ்தானின் கராச்சி நகரத்தில் உள்ள பாக் கப்பற்படை துறைமுகத்தில் துவங்கியது. இதன் முழக்கம் "**Together for Peace"** ஆகும்.
- ✓ பாகிஸ்தான் உள்ளிட்ட 46 நாடுகளின் கொடிகள் ஏற்றப்பட்டது. பாக்கிஸ்தான் கடற்படையின் வீரர்கள் அணிவகுப்பு நடத்தினர்.
- ✓ பயிற்சிக்கான முக்கிய நோக்கம் அனைத்து நாடுகளின் கடல்சார் கருத்துக்கள் மற்றும் செயல்திறன் கலாச்சாரங்களை புரிந்து கொள்வதற்கான ஒரு மன்றத்தை உருவாக்குவதுடன், கடலில் பொதுவான அச்சுறுத்தல்களை எதிர்த்து போராடுவதற்கான வழிகளை வகுப்பதாகும்.
- ✓ கடல்சார் ஒத்துழைப்பை வளர்ப்பது, பிராந்திய மற்றும் உலகளாவிய நிலைத்தன்மைக்கு பாதுகாப்பான கடல் சூழலை ஊக்குவித்தல்,

winmeen.com

- ✓ மனிதர்களின் பொதுவான பாரம்பரிமான சமுத்திரங்களை பாதுகாத்தல் ஆகியவை இப்பயிற்சியின் நோக்கமாகும்.

6) மீடியா யூனிட்களின் முதல் வருடாந்திர மாநாட்டை எந்த அமைச்சகம் ஏற்பாடு செய்தது?

**A]** தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகம்

**B]** மனித வள மேம்பாட்டு அமைச்சகம்

**C]** அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம்

**D]** மின்னணு அமைச்சகம்

- ✓ பிப்.13 அன்று புது தில்லி விஜயன் பவனில் தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகத்தால் மீடியா யூனிட்களின் முதல் வருடாந்திர மாநாடு நடைபெற்றது.
- ✓ மாநாட்டின் நோக்கம் **Indian Information Service(IIS)**-ன் கீழ் வெவ்வேறு மீடியா யூனிட்களில் பணிபுரியும் அதிகாரிகள் வளர்ந்துவரும் தகவல்தொடர்பு கருத்தியல் பற்றி விவாதிக்கவும்,திட்டமிடவும் ஒத்த தளங்களை ஏற்படுத்தி தருவதாகும்.
- ✓ இம்மாநாட்டில் மீடியா யூனிட்களுக்கு இடையிலான ஒற்றுமையை வலுப்படுத்துவதன் மூலம், ஒரே நேரத்தில் புதிய தொழில்நுட்பத்தின் உபயோகத்தை உள்நோக்கவும், கடைநிலை விநியோகத்தை உறுதிப்படுத்துவும் முடியும்.
- ✓ பங்கேற்பாளர்கள், சமூக வலைதளங்கள் மூலம் பார்வையாளர்களை பெறும் யுக்திகளும், புவியியல் மற்றும் கலாச்சார தடைகள் தாண்டி தொடர்பு எல்லைகளை விரிவாக்குவது பற்றியும் இம்மாநாட்டில் விவாதிக்கப்படும்.

7) சமீபத்தில் செய்திகளில் வெளியான ஹொறல்லாங் மாடுலர் எரிவாயு பதப்படுத்தும் ஆலை (**HMGPP**) எந்த மாநிலத்தில் அமைந்துள்ளது?

**A]** ஒடிசா

**B]** திரிபுரா

**C]** நாகலாந்து

**D]** அசாம்

- பிப் 9 அன்று பிரதமர் நரேந்திர மோடி அசாமின் திரோக் நிலப்பகுதியில் **Hindustan Oil Exploration Co. Ltd.(HOEC)** ன் **Hollong Modular Gas Processing Plant (HMGPP)**ஐ துவங்கி வைத்து இந்த நாட்டுக்கு அர்ப்பணித்தார்.
- ஆரம்பத்தில், **HMGPP** அஸ்ஸாமின் வாயு உற்பத்தியில் 15% மற்றும் 800 பேரல் ஆவி இவற்றிற்கு சமமான அளவில் ஒரு நாளைக்கு 35 மில்லியன் கன்டி நிலையான வாயுக்களை உற்பத்தி செய்யும் திறனை கொண்டுள்ளது. இந்த ஆலை அஸ்ஸாமின் டின்சுகியா மாவட்டத்தில் உள்ள மர்கேரிட்டா பகுதியில் அமைந்துள்ளது.
- இந்த நிலத்தில் இருந்து உற்பத்தி செய்யப்படும் வாயுவானது பிரம்மபுத்ரா க்ராக்கர் மற்றும் பாலிமர் லிமிடெட் மற்றும் வடகிழக்கு பிராந்தியத்தில் உள்ள நுகர்வோருக்கு வழங்கப்படும்.
- திரோக் நிலம் **HOEC** மூலம் **JV** பங்காளிகளான - **Oil India Ltd. and Indian Oil Corporation** நிறுவனங்களுடன் இணைந்து படிப்படியாக கட்டப்படுகிறது.

8) 3வது ஸ்வட்ச் சக்தி-2019 எந்த நகரத்தில் நடைபெற்றது?

**A]** டெஹ்ராடூன்

**B]** லக்னவ்

**C]** காந்தி நகர்

**D]** குருக்சேத்ரா

- பிப் 12 அன்று மூன்றாவது ஸ்வச்ச் சக்தி -2019 ஹரியானாவின் குருஷேத்ராவில் நடைபெற்றது. இதில் ஸ்வச்தா திட்டத்துடன் சம்மந்தப்பட்ட நாடுமுழுவதும் உள்ள
- பெண்கள் கலந்துகொண்டனர். அக் 2,2019 க்குள் திறந்தவெளி மலம் இல்லாத நாடாக இந்தியா மாறுவதற்கு ஸ்வச் பாரத் திட்டத்தில் பெண்களின் பங்களிப்பை உறுதிப்படுத்துவதற்காக இந்நிகழ்ச்சி நடைபெறுகிறது.
- இந்த ஆண்டு ஸ்வட்ச் சக்தி நிகழ்ச்சியில் சுமார் 15,000 பெண்கள் பங்கேற்றனர். பிரதமர் மோடி '**Swachh Shakti 2019'** விருதுகளை வழங்கினார். ஹரி யானா அரசுடன் இணைந்து குடிநீர் மற்றும் சுகாதார வசதிகள் அமைச்சம் ஸ்வட்ச் சக்தி-2019 நிகழ்ச்சியை நடத்தியது.
- ஸ்வட்ச் பாரத் திட்டத்திற்கு கிராமப்புறங்களில் அடிமட்டத்திலிருந்து சிறந்த நடைமுறைகளுக்கான விருது அவர்களால் பகிர்ந்து கொள்ளப்படும்.
- ஸ்வட்ச் பாரத் மற்றும் சமீபத்தில் நடத்தப்பட்ட ஸ்வட்ச் சுந்தர் ஷாச்சலே, (சுத்தமான கழிப்பறை திட்டஙாகளின் சாதனைகளை இந்நிகழ்வு வெளிப்படுத்தும்.

9) இந்தியாவின் தேசிய யுனானி தினம் எந்த நாளில் கொண்டாடப்படுகிறது?

A] பிப்ரவரி 10

B] பிப்ரவரி 11

C] பிப்ரவரி 12

D] பிப்ரவரி 13

- ✓ யுனானி ஆய்வாளர் ஹக்கீம் அஜ்மல் கான் அவர்களின் பிறந்தநாளை நினைவூட்டும் வகையில் ஒவ்வொரு வருடமும் பிப்ரவரி 11 ஆம் தேதி தேசிய யுனானி தினம் கொண்டாடப்படுகிறது.
- ✓ அவர் ஒரு சிறந்த இந்திய யுனானி மருத்துவர், சுதந்திர போராட்ட வீரர், கல்வியாளர் மற்றும் யுனானி மருத்துவத்தில் அறிவியல் ஆராய்ச்சி நிறுவனர் ஆவார்.
- ✓ 3வது யுனானி தினம் 2019 கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, யுனானி மருத்துவம் பற்றிய இரண்டு நாள் தேசிய மாநாடு புது டெல்லியில் "**Unani Medicine for Public Health**" என்ற கருப்பொருளுடன் நடைபெற்றது. யுனானி மருத்துவ ஆராய்ச்சி மையத்தால் (**CCRUM)** ஆல் இது நடத்தப்பட்டது.
- ✓ **NCDs,** வாழ்க்கைமுறை சீர்குலைவு மற்றும் பல்வேறு நீண்ட நாள் நோய்களுக்கு எதிராக போராடுவதில் யுனானி மருத்துவத்தின் பங்களிப்பு இம்மாநாட்டில் மேற்கோள்காட்டப்பட்டது.நோயாளிகளின் நலனுக்காக குறைந்த செலவில் தரமான மருந்துகளை யுனானி மருத்துவம் வழங்குகிறது. சுமார் 1300 பிரதிநிதிகள், கல்வியாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் தொழில் பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் பங்கேற்றனர்.

10) 2019 டான் டேவிட் பரிசு வென்ற இந்திய வரலாற்றாசிரியர் யார்?

A] சஞ்சய் சுப்ரமணியம்

B] இர்பான் ஹபிப்

C] MGS நாராயணன்

D] சுமித் சர்கார்

- ✓ புகழ்பெற்ற இந்திய வரலாற்றாசிரியரான சஞ்சய் சுப்ரமணியம், 2019 ஆம் ஆண்டுக்கான இஸ்ரேலின் புகழ்பெற்ற டான் டேவிட் பரிசு வென்றார். இவர் ஆசிய, ஐரோப்பிய மற்றும் வடக்கு மற்றும் தெற்கு

அமெரிக்காவினை சேர்ந்த மக்களின் இடைப்பட்ட நவீன கலாச்சார சந்திப்புகள் பற்றி ஆராய்ச்சி செய்துள்ளார்.

- ✓ வரலாற்றில் அவருடைய சிறந்த பணிக்காக "**past time dimension”** பிரிவில் இந்த விருது வழங்கப்படுகிறது. சிகாகோ பல்கலைக் கழகத்தின் வரலாற்றுப் பேராசிரியர் பேராசிரியர் கென்னத் பொமிரான்ஸுடன் அவர் $1 மில்லியன் பரிசுப் பணத்தை பகிர்ந்துகொள்வார். இந்த பரிசு கொடையாளி டான் டேவிட் பெயரிடப்பட்டு, இஸ்ரேலின் டெல் அவீவ் பல்கலைக்கழகத்தால் நிர்வகிக்கப்படுகிறது.
- ✓ விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் மனிதநேய சாதனைகள் செய்பவர்களுக்கு ஆண்டுதோறும் இந்த விருது வழங்கப்படுகிறது.
- ✓ மே 2019 இல் டெல் அவீவ் பல்கலைகழகத்தில் விருது வழங்கும் விழா நடைபெறும்.